# பொருளாதாரத் தொகைமதிப்பு – 2013/14
## (விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்கள் சேகரித்தல்)
## ஊடகங்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம்

### பொருளாதாரத் தொகைமதிப்பு – 2013/14 சுருக்கமான அறிமுகம்

இலங்கையின் 14 ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2012 இல் நடாத்தப்பட்டது. பொதுவாக, குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு நடாத்தப்பட்டதன் பின்னர் உடன் அடுத்துவரும் இரு வருடங்களில் முறையே விவசாயத் தொகைமதிப்பு மற்றும் கைத்தொழில் தொகைமதிப்பு நடாத்தப்படுவது வழமையான மரபாகும். ஆனால் இந்தத் தொகைமதிப்புக்களில் வர்த்தகம் மற்றும் சேவைகள் ஆகிய துறைகள் உள்ளடக்கப்படுவதில்லை. எனினும் அதிகமான வளர்ச்சியடைந்த நாடுகளைப் போன்று இலங்கையிலும் தற்போது மொத்தத் தேசிய உற்பத்திக்குச் சேவைகள் துறையின் பங்களிப்பு ஏனைய துறைகளை அதாவது, விவசாயம் மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளைப் பின்தள்ளி முதன்மை நிலையை அடைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டிற்காகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிற்கமைய தற்போது விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகள் மொத்தத் தேசிய உற்பத்திக்கு வழங்கும் பங்களிப்பு முறையே 11%, 30% மற்றும் 59% ஆகும்.

இவ்வாறு அதிக வளர்ச்சியடைந்துள்ள நாடுகளைப் போன்று இலங்கையிலும் பொருளாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள கட்டமைப்பு மாற்றங்களைக் கவனத்தில் கொண்டு விவசாயம் மற்றும் கைத்தொழில் என்றவாறு இரு தொகைமதிப்புக்களை வெவ்வேறாக மேற்கொள்ளாமல் அந்தச் சகல துறைகளும் உள்ளடங்கும் வகையில் 2013/14 ஆம் வருடங்களில் பொருளாதாரத் தொகைமதிப்பினை நடாத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தொகைமதிப்பின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் நாட்டின் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைத் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை மதிப்பிடல், துறைகளில் ஏற்பட்டுள்ள கட்டமைப்பு மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு அந்தத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தல் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அளவீடுகளுக்குத் தேவையான நிறுவனங்களின் பட்டியலொன்றைத் தயாரித்துக் கொள்ளல் ஆகியவற்றுக்குப் பயனுடையதாகும். அவ்வாறே விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் தொடர்பாக இதுவரை பாரிய அளவில் பற்றாக்குறை நிலவிய தகவல்களைச் சேகரிப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்திற்கமையப் பொதுமக்களிடமிருந்து இந்தத் தகவல் சேகரிக்கப்படுவதுடன் அரசின் கொள்கை வகுப்பாக்கம் மற்றும் தீர்மானமெடுத்தல் ஆகியவற்றுக்குத் தேவையான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தரவுகளை நாட்டின் அபிவிருத்திக்காக வழங்குவதற்குப் பொதுமக்கள் கடப்பாடுடையவர்களாவர். அவ்வாறே அந்தத் தகவல்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதற்கு தொகைமதிப்புப் மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தொகைமதிப்புக்கட்டளைச் சட்டத்திற்கமைய கடப்பாடுடையது. தொகைமதிப்பில் சேகரிக்கப்படும் தகவல்களைப் பயன்படுத்தி நிருவாகப் பிரிவு மட்டத்தில் தயாரிக்கப்படும் புள்ளிவிபரங்கள் மட்டும் வெளியீடு செய்யப்படும்.

பொருளாதாரத் தொகைமதிப்பு 4 கட்டங்களாக நடாத்தப்படவுள்ளது. முதலாவதாக இலங்கையில் காணப்படும் அனைத்துப் பெருந்தோட்டங்களும் (20 ஏக்கர்களிலும் அதிகமான விவசாயக் கூறுகள்) 2013 ஆம் ஆண்டு ஜுலை – ஆகஸ்ட் மாதங்களில் நிரற்படுத்தப்படும். அந்தக் கட்டம் தற்போது

நிறைவடைந்துள்ளது. இரண்டாவது கட்டத்தின் கீழ் சகல கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைக் கூறுகள் இந்த வருடத்தின் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் நிரற்படுத்தப்படும்.

பின்பு 2014 ஜனவரி – மார்ச் மாதங்களில் விவசாயத் துறைக்குரிய சகல கூறுகள் தொடர்பான விரிவான தகவல்கள் சேகரிக்கப்படுவதுடன் அதே வருடத்தின் ஜுலை – ஆகஸ்ட் மாத காலப்பகுதியில் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைத் துறைகளின் தகவல் சேகரிப்பு தொகைமதிப்பின் நான்காவது கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

இலங்கையில் அமையப் பெற்றுள்ள சகல விவசாய நிலங்களும் உள்ளடங்கும் வகையில் விவசாயச் செய்கையாளர்கள், விவசாயச் செய்கையாளரின் குடித்தனம் தொடர்பான தகவல்கள், நிலப் பயன்பாடு மற்றும் நிலவுடமை, ஒவ்வொரு பயிரின் கீழும் பயிரிடப்பட்டுள்ள நில விஸ்தீரணம், நன்னீர்/ உவர்நீர்/ கடல்நீர் மீன் உற்பத்தி போன்ற விடயங்களுக்குரிய தகவல்கள் விவசாயத் துறைக்கமைவாகச் சேகரிக்கப்படும்.

பொருளாதாரத் தொகைமதிப்பில் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் துறைக்கமைவாகக் கைத்தொழில், வர்த்தகம் அல்லது சேவை நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் அல்லது வீட்டுக் கூறுகளை அடையாளம் காணும் அடிப்படைத் தகவல்கள், ஈடுபடும் பொருளாதார நடவடிக்கைகளின் தன்மை, இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களை அடையாளம் காண்பதற்குத் தேவையான சேவையில் ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கை, கடந்த வருடத்தின் வருமானம், செலவுகள், முடிவுப் பொருள் உற்பத்தி ஆகிய தகவல்களையும் பொருளாதார நடவடிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள முறை தொடர்பான தகவல்களையும் சேகரிப்பதற்குத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் எதிர்பார்க்கிறது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பொருளாதாரத் தொகைமதிப்புச் செயன்முறையின் போது அதனை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்குப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களிடமிருந்து உண்மையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகத் திணைக்களத்தினால் நியமிக்கப்படும் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் கூறுகளுக்கு வருகை தருவார்கள். இதன்போது பொருளாதார நடவடிக்கைகளில் இதற்காகச் சுயமாகவே முன்வந்து தகவல்களை வழங்கும் வகையில் ஊடகங்கள் வாயிலாக அவர்களைத் தெளிவுபடுத்துவதன் மூலம் உண்மையான தகவல்களைப் பெற்றுக்கொள்வது இலகுவாகும். இலங்கையில் முதன்முறையாக நடாத்தப்படும் இந்தப் பொருளாதாரத் தொகைமதிப்பினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக ஊடகங்கள் மூலம் தொகைமதிப்பின் ஒவ்வொரு கட்டங்கள் தொடர்பாகப் பரந்த அளவிலான பிரச்சாரத்தினைப் பெற்றுத் தருமாறு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சகல ஊடக நிறுவனங்களையும் வேண்டி நிற்கின்றது.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,
4ஆம், 5ஆம் மாடிகள்,
ரொடுண்டா கோபுரம்,
இலக்கம் 109, காலி வீதி,
கொழும்பு 03.

தொலைபேசி இலக்கம் : 011 2147000, 2147050
இணையம் : www.statistics.gov.lk